# 24. இயேசுவும் சிறுவர்களும்



இயேசு எங்களை நேசிக்கின்றார்.
நாமும் இயேசுவை நேசிக்கின்றோம்.

## வணக்கம்

### 1

ஆகமங்கள் புகழ்வேதா, நமோ நமோ!
வாகுதங்கு குருநாதா நமோ நமோ!
ஆயர் வந்தனை செய் பாதா நமோ நமோ! அருரூபா

மாகமண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா நமோ நமோ!
வாக சங்கம விஸ்வாசா நமோ நமோ! மனுவேலா

நாகவிம்ப முயர்கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா! நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா நமோ நமோ! நரதேவா!

ஏகமந்திரமுறு பூமா நமோ நமோ!
யூக தந்திரவதி சீமா! நமோ நமோ!
யேசு வென்ற திருநாமா நமோ நமோ! இறையோனே.

### 2

1. அன்பின் ஒளியின் முதல் உதயம்
   அகிலம் நிறையும் முதல் உதயம்
   துன்பம் நீக்கும் முதல் உதயம்
   தூய வாழ்வின் முதல் உதயம்

2. சாந்தி மணக்கும் முதல் உதயம்
   சஞ்சலம் போக்கும் முதல் உதயம்
   சிறுதனை விரியும் முதல் உதயம்
   சிறுமை மறையும் முதல் உதயம்

3. ஆயர்கள் காணும் அருள் உதயம்
   அரசர்கள் தேடிய ஒளி உதயம்
   நேயம் தோன்றிய திரு உதயம்
   நேரில் காண வாரீரோ

## தோத்திரம்

### 3

1. தேவனே உமக்கே தோத்திரம் //
   தோத்திரம் ////
   உண்டாவதாக தோத்திரம்
2. தேவகுமாரனே உமக்கே தோத்திரம்
3. தூயாவியே உமக்கே தோத்திரம்

## 4

சின்ன சிட்டுக் குருவியே // உன்னை
சந்தோஷமா படைத்தது யாரு
அங்கும் இங்கும் பறந்துகிட்டு
ஆனந்தமா பாடுறியே - உன்னை
அழகாகப் படைத்தது யாரு?

ஐயோ ஐயோ இது தெரியாதா - ஒரு
ஆண்டவர் எனக்கு மேலே இருக்கிறார்
உண்ண உணவு கொடுக்கிறார்
உறங்க இடமும் கொடுக்கிறார் - இந்த
உலகத்தையே படைச்சும் இருக்கிறார்.

சின்ன சிட்டுக் குருவியே // உன்
சிறகை எனக்குத் தந்திடுவாயா
உன்னைப்போல பாடிக்கிட்டு
உல்லாசமா பறப்பதற்கு - ஒரு
உதவி எனக்குச் செய்திடுவாயா?

ஐயோ இனிமேல் அப்படிக் கேக்காதே - அந்த

ஆண்டவர் கேட்டா கோவிச்சுக்குவாரே
எங்களைக் காக்கிற ஆண்டவர்
உங்களைக் காப்பது இல்லையா - அவர்
உங்களைத்தானே ரொம்பவும் நேசிக்கிறார்

ஆமா சிட்டுக் குருவியே // அது
மனுஷங்களுக்கு புரியவில்லையே
உங்களைக் காக்கிற ஆண்டவர்
எங்களைக் காக்க மாட்டாரோ - இந்த
உண்மையும் ஏனோ தெரியவில்லையே

## துதி
## 5

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலமெல்லாம்
என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்.

## விண்ணப்பம்

### 6

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரமபிதாவே, எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்.
பரிவுடன் வருக உம் ராச்சியம்
பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப்படுவது போல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா,
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக்கீந்தருளும்
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போலெம் பிழை மன்னியும்
தேவ சோதனைக் கெமை விலக்கி
தீமையினின்றெமை இரட்சியுமே, மேவும்
ராச்சியம், வல்லமை, மகிமை மிகவும்
உமதென்றுமே ஆமேன்.

### 7

தேன் வண்டு வாசனைப் பூவினில்
தேன் அருந்த திரிவது போல்
உமது ஆசி தேடி வந்தோம்
உமது அருளைப் பொழியுமே

தேனமுதல் உண்டு களித்து
ஆனந்தமாய் ஆடிடும்
தேன் வண்டு போலே நாமும்
தேவனின் மகிமை பாடுவோம்

பெற்றோர், உற்றார். நண்பர், அன்பர்
யாவரையும் ஆசீர்வதியுமே
பாவக் கட்டிலிருந்து மீட்டு
உமது மைந்தராய் ஆக்குமே

கர்த்தாவே உமது நன்மைகள்
தேனிலும் இனியதே
உமது அன்பை உம் உள்ளத்தில்
ஊற்றிக் காத்து நடத்துமே.

## வாழ்த்து
## 8

சுபசோபன பிறந்த நாள் //
.......... தங்கையின் .......... தம்பியின்
தேவ ஆசீர்வாதத்தோடு
சந்தோஷம் நிறைந்த நாள்

வளர்ச்சி பருமனுடன்
இரக்க குணம் உடன்
எல்லோரையும் நேசித்து
தேவ குழந்தையைப் போல
நல்ல வழி செல்ல வேண்டுமே

## ஒற்றுமை
## 9

சின்ன பாப்பாக்கள்
கைககள் விரித்து
காலால் நடந்து - ஹாய்
ஆடி வருவார்

பேதமும் இல்லை
சண்டையும் இல்லை
இயேசுநாதருக் - குள்
ஒன்றாய் இருக்கிறோம்

இலங்கையில் பூக்கும்
பூக்களும் நாங்கள்
எமது தேச வாழ் - வும்
எங்கள் கையில் தான்